1990 மார்ச் 31]

டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சீனியர் அவுஸ் சர்ஜன், போஸ்ட் கிராஜுவேட் போன்ற மருத்துவர்கள் பயிற்சி மருத்துவர்கள் தங்கும் விடுதியில் தங்கி இருப்பதால் பயிற்சி மருத்துவர்கள் தங்குவதற்கு அறைகள் இல்லாமல் மெடிகல் காலேஜிலே தங்கியுள்ளார்கள். இது குறித்து அரசுக்குத் தகவல் வந்துள்ளதா? பயிற்சி மருத்துவர்கள் இல்லங்கள் மேற்கொண்டு விஸ்தரிக்கப் படும் குறிப்பு அரசிடம் உள்ளதா என்று அறிய விரும்புகிறேன்:

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி உதவித்தொகையைப் பற்றியது. விடுதிகள் பற்றி தெரிய வேண்டுமானால் தனிக் கேள்வி கேட்கவும்.

கழிவு நீர் சுத்திகரிப்புத் திட்டம்.

*7946—திரு. ஜெ. அசேன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

இராணிப்பேட்டையில் உள்ள தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கான பொதுவான கழிவுநீர் (Common effluent Treatment plant) சுத்திகரிப்புத் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: இராணிப்பேட்டை தோல் பதனிடுவோர் சங்கமும், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகமும் இணைந்து ஏற்படுத்தியுள்ள ''இராணிடெக்'' (Ranitec) என்ற நிறுவனம் மூலம் அமைக்கவிருக்கும் பொதுவான கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்குத் தேவையான நிலம் வாங்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதி உதவி கிடைத்தவுடன் நிர்மாணப் பணிகள் தொடங்கப்படும்.

பீடித் தொழிலாளர் நல வாரியம்.

*5039—திரு. சு. குருநாதன்:

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்களின் குறைகளைப் போக்க பீடித் தொழிலாளர் நல வாரியம் அமைக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பீடித் தொழிலாளர்களின் நலனிற்காக 1976ஆம் ஆண்டு பீடித்தொழிலாளர் நல நிதிச் சட்டம் என்று ஒரு சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. பீடித் தொழிலாளர் நல நிதியிலிருந்து மருத்துவ வசதி, கல்வி வசதி, வீட்டு வசதி முதலிய

வசதிகள் இத்தொழிலாளர்களுக்கு செய்து தரப்படுகின்றன. பீடித்தொழிலாளர் நல நிதி குறித்து ஆலோசனை வழங்க மாநில அளவில் ஆலோசனைக் குழு ஒன்றும், மத்திய அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

மேற்சொன்ன சூழ்நிலையில், பீடித் தொழிலாளர்களுக்கென தனி வாரியம் அமைக்கும் தேவை ஏற்படவில்லை.

திரு. சு. குருநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் சற்றேறக்குறைய 10 இலட்சம் ஆண்களும் பெண்களும் இந்தத் தொழிலிலே ஈடுபட்டுள்ளார்கள். அப்பேர்ப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த தொழிலிலே அவர்களுக்குப் பல்வேறு குறைபாடுகள் இருக்கின்ற காரணத்தினால் தனியாக வாரியம் அமைத்தால்தான் அவர்களுடைய குறைகளைப் போக்குகின்ற அளவுக்கு அரசு பணிகளைக் கவனிக்க முடியும் என்ற காரணத்தினால் அரசு மீண்டும் தனி வாரியம் அமைக்க பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்கள் நல நிதிச் சட்டத்தின் கீழ் மாநில அரசின் தொழிலாளர் துறை துணைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டு மாநில ஆலோசனைக் குழு அமைக்கப்பட்டு இருக்கிறது. இக்குழு பீடித் தொழிலாளர்கள் பிரதிநிதிகளையும், பீடித் தொழில் நிர்வாகத்தினரையும் உறுப்பினராகக் கொண்டதான குழுவாகும். இந்தக் குழு மட்டுமல்லாமல் தொழிலாளர் நலத்துறை அமைச்சரைத் தலைவராகக் கொண்டு மாநிலத் தொழிலாளர் ஆலோசனைக் குழு என்று ஒன்றும் இருக்கிறது. இதையெல்லாம் அமுல்படுத்துவதற்காகத் தொழிலாளர் துறைச் செயலாளர் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழு ஒன்றும் இருக்கின்றது. இந்த 3 குழுக்களும் தனித்தனியாகச் செயல்படுகின்ற காரணத்தினால் தனி வாரியம் அமைக்கத் தேவையில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

9-30 மணி

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர் நலச் சட்டத்தின்கீழ் பீடித் தொழிலாளர்கள் நலன் கவனிக்கப்படுவதாக இங்கே சொன்னார்கள். அதோடு பீடித் தொழில் சம்பந்தப்பட்ட சுருட்டுத் தொழிலாளர்களும் நலத் திட்டத்தின் கீழ் கவனிக்கப்படுகிறார்களா ? அல்லது கவனிப்பீர்களா ? சட்டப்படி பாதுகாப்பு சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் சேர்த்து கிடைக்குமா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு உள்ள அத்தனை சலுகைகளும் சுருட்டுத் தொழிலாளர்களுக்கும் வழங்கப்படும்.

1990 மார்ச் 31]

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் பீடித் தொழிலாளர்கள் குறையினைப் போக்க வாரியத்தினை மத்திய அரசு மற்றும் மாநில அரசு அமைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் இங்கே சொன்னார்கள். மாநிலத்தில் அமைக்கப்பட்ட குழு எத்தனை தடவை கூடி ஆலோசனை நடத்தியது? பீடித் தொழிலாளர்கள் மற்றும் உரிமையாளர்களோடு கூலி சம்பந்தமாக பேசப்பட்டதா? அதன் மூலம் இதற்கு முன்பு அந்த வகையில் ஏதாவது செயல்பாடுகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு பிரச்சினை ஏற்படும்போது எல்லாம் குழு கூட்டப்பட்டு ஆராயப்பட்டு வந்திருக்கிறது. குறிப்பாக பீடித் தொழிலாளர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி பேசும்பொழுது மத்திய மாநில அரசின் உதவியோடு இலவசமாக வீடுகள் கட்டித் தர வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டது. அந்த வகையில் திருநெல்வேலி மாவட்டத்தில் ஆயிரம் வீடுகள் பீடித் தொழிலாளர்களுக்காக கட்டிக் கொடுக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலாளர்களுக்கு நலத் திட்டங்களை அமுல் படுத்தக் குழு அமைக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். பீடித் தொழிலாளர்கள் குடும்பத்தைச் சேர்ந்த பிள்ளைகள் பள்ளிகளில், கல்லூரிகளில் ஸ்காலர்ஷிப் பெற முடியவில்லை; காரணம் பல நிபந்தனைகள் வைத்திருக்கின்றார்கள். அதனால் அவர்கள் இந்த உதவியைப் பெற முடியவில்லை. அதோடு இந்தத் தொழிலாளர்கள் காச நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே, அதிகமாகத் தொழிலாளர்கள் இருக்கிற திருநெல்வேலி, வட ஆற்காடு போன்ற மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் அங்கே மார்பு நோய்க்காக தனியாக மருத்துவமனை வைக்க வேண்டுமென்று கோரி வந்திருக்கிறார்கள். இந்த இடங்களில் இலட்சக்கணக்கான மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். காச நோய்க்காக மத்திய அரசு அளிக்கின்ற நிதியைப் பெற்று இதற்கு ஆவன செய்வதோடு, இலவசமாக இந்தத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கவும் ஆவன செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி, வட ஆற்காடு மற்றும் திருச்சி போன்ற மாவட்டங்களில் அரசிடமிருந்து பீடித் தொழிலாளர்களுக்கு இலவசமாக வீடுகள் கட்டித் தரும் திட்டம் இருக்கிறது. ஆகவே, நிலங்களைக் கையகப்படுத்தித் தாருங்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களிடம் கேட்டபோது, மற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பதில் வரவில்லை. ஆனால், திருநெல்வேலி மாவட்டத்திலிருந்து மட்டும் ஆயிரம்

வீடுகள் கட்டிக் கொடுக்க நிலம் கையகப்படுத்தித் தந்தார்கள். ஆக, அது இந்த வருடம் நிறைவேற்றப்பட இருக்கிறது. மற்றும் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கு உள்ள படிப்பு வசதி போன்ற உறுப்பினருடைய கருத்தை இந்த அரசு ஆலோசித்து ஆவன செய்யும்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் திருநெல்வேலி மாவட்டத்தில் நிறைய பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். நெல்லை மாவட்டத்தில் இது முக்கியமாக இருக்கிறது. பல பெண்களும் இத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு பாஸ் புத்தகம் தராமல் அவர்களுடைய கணவன் பெயரில் அதைத் தருகிறார்கள். ஏனென்றால் அவர்களின் பெயரில் தந்தால் மெட்டர்னிட்டி லீவ் மற்றும் சலுகைகளைத் தரவேண்டியிருக்கும், தராமல் இருப்பதற்காக அதை இப்படிச் செய்கிறார்கள். மற்றும் இதுபோன்ற பல குறைபாடுகள் இருக்கின்றன. இக்குறைகளை நீக்குகின்ற வகையில் இந்த அரசு வந்ததற்குப் பிறகு கூலியை $9\frac{1}{2}$ ரூபாய் என்று இருந்ததை 14 ரூபாயாக ஆக்கியிருக்கிறது. கூலி மட்டுமல்ல, இதுபோன்ற பல சலுகைகள் தரத் தனியாக ஒரு வாரியம் அல்லது குழு அமைத்து அவர்களுடைய குறைகளைப் போக்க இந்த அரசு முன்வருமா ?

9-35 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சொல்லியிருக்கின்றேன். தனியாக நல வாரியம் அமைக்கத் தேவையில்லை, ஆலோசனைக் குழு மூலமாகவே, நல்ல முறையில் செயல்படுமென்று. பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்குள்ள குறைகளைக் குறைப்பதற்கும் இந்த அரசு முயற்சி எடுக்கும்.

திருமதி எஸ். பி. சற்குணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடித் தொழிலில் பெண்களும், சிறுவர்களும் அதிகமாக ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து, அரசு நியமித்து இருக்கின்ற குழுக்களில், பெண் தொழிலாளர்களுக்கு வாய்ப்பு தரப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாய்ப்பு தரப்பட்டிருக்கிறது.

கண்டமங்கலத்தில் ஐ.டி.ஐ. ஏற்படுத்துதல்.

*5183 திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :